176438

[illegible] వినోదిని

సంపుటి-8 సంచిక-4

[illegible]=1926

N26
176438

3 JUL 1926

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 8 | ஏப்ரல் 1926 | பகுதி 4

5/93

## தெய்வ வணக்கம்.

(தெய்வ மணிமாலை)

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி அன்பருள்
திருவோங்கு செல்வமோங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து,
மருவோங்கு செங்கமல மலரோங்கு வனமோங்க
வளர்கருணை மயமோங்கியோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி யானந்த
வடிவாகி யோங்கி ஞான
உருவோங்கு முணர்வின்நிறை வொளியோங்கி யோங்குமயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கு நின்பதமென் உளமோங்கி வளமோங்க
உய்கின்ற நாளெந்தநாள்
தருவோங்கு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

(திருவருட்பா)

JL
m41, N19BV
N2b.
176458
(16)
5

17646

# ஹிதோபதேசம்

2. இராத்திரியில் நாம் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களைப் பார்க்கிறோம். பகலிலே பார்ப்பதில்லை? அதனால் பகலில் நக்ஷத்திரமில்லையென்று சொல்லமுடியுமா? முடியாதல்லவா? அதுபோல் நீ உன்னுடைய அக்ஞானத்தினால் கடவுளைக் காண்பதில்லை. அதனால் கடவுள் இல்லையென்று சொல்லமுடியுமா?

2. ஜலத்தை நீர் - பானி - வாரி - என்று பெயரிட்டு அழைப்பதுபோல் கடவுளையும் உலகத்திலுள்ள ஜனங்கள் பல பெயரினால் அழைக்கிறார்கள்.

3. ஒரு மருமகள் எப்படி தன் கணவனிடத்தில் அதிக அன்பும் தன் மாமன் மாமனார் மைத்துனன் முதலியவர்களிடத்தில் அவ்வளவு அன்பு இல்லாவிட்டாலும் அவர்களிடத்தில் வணக்கமும் அன்பும் மரியாதையும் வைத்து நடக்கிறாளோ அப்படியே நீ உன் குலதெய்வத்தினிடமும் மற்ற தெய்வத்தினிடமும் நட.

4. கடவுள் - காந்தம், மனிதன் - இரும்பு - என்று கூறுவர். ஆனால் காந்தம் இரும்பைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளுவதுபோல் மனிதனை ஏன் கடவுள் இழுத்துக்கொள்வதில்லை என்று கேட்கலாம். இரும்பு சேற்றில் அழுந்திக் கிடக்குமானால் அதைக் காந்தம் இழுக்குமா? இழுக்காதன்றோ? அதுபோல் மனிதன் தெளிந்த ஞானம் பெறாமல் மாயையில் அழுந்திக் கிடக்கிற வரையில் அவன் கடவுளை அடையமுடியாது.

5. பாசிமூடிய ஜலம் நிறைந்த குளத்தில் ஜலத்தை நீ எப்பொழுது காண்கிறாய்? பாசியை நீக்கியபிறகே. அதுபோல் எங்கும் நிறைந்த கடவுளைக் காணவேண்டுமானால் பாசியைப்போல் உன்னை மறைத்துக்கொண்டிருக்கும் அஞ்ஞானம் உன்னை விட்டு நீங்கவேண்டும்.

(ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்)



# விசித்திரங்கள்

1. பூமண்டலம் போன்ற கோளங்கள் 14லக்ஷம் ஒன்று சேர்ந்தால் சூரியமண்டலத்தின் பிரமாணம் இவ்வளவென்று தெரியவருமாம். சூரியன் அவ்வளவு பெரிதாயிருந்தும், பூமியிலிருந்து ஒன்பதுகோடி மைல் தூரத்திற்கப்பாலிருப்பதால் அது பார்வைக்கு ஒரு சக்கரம்போல் தெரிகிறது. ஒரு மணி ஒன்றுக்கு 30-மைல் தூரம் போகக்கூடிய ஒரு ரயில் இரவும் பகலும் இடைவிடாமற் பிரயாணம் செய்தால் 350-வருஷங்களில் சூரிய மண்டலத்திற்குப் போய்ச் சேரக்கூடுமென்று கணக்கு செய்திருக்கிறார்கள்.

2. சந்திர மண்டலம் சூரிய மண்டலத்தையும் பூமண்டலத்தையும் விடச் சிறியது. அன்றியும் அது சூரிய மண்டலத்தைவிட அருகே இருக்கிறது. மணிக்கு 30-மைல் போகக்கூடிய ரயிலில் போனால் சந்திர மண்டலத்திற்கு ஒரு வருஷத்திற் போய்ச் சேரலாம்.

3. ஆகாயத்தில் நமது கண்ணுக்குத் தெரியும் நக்ஷத்திரங்கள் மாத்திரந்தானிருக்கின்றன என்பதில்லை. கோடிக்கணக்காக இருக்கின்றன. அவை தூரதிருஷ்டி கண்ணாடியினால் பார்த்தால் தெரியவருகின்றன.

4. சூரிய மண்டலத்தைவிட, ஆயிர மடங்கும் லக்ஷ மடங்கும் கோடி மடங்கும் அநேக கோடி மடங்கும் பெரியதாயிருக்கின்ற மண்டலங்கள் அநேகம் ஆகாயத்தில் நிராதாரமாய் நிலைத்திருக்கின்றன. அவை யெல்லாம் இவ்வளவு தூரத்திலிருக்கின்றன என்று மனதினால் ஸ்மரித்தற்குக்கூட சாத்தியமில்லாத தூரத்திலிருக்கிறபடியால் அவை மிக மிகச் சிறியவைகளாகக் காணப்படுகின்றன.

# போஜ ராஜ சரித்திரம்

முன்னொரு காலத்தில் தாரா என்னும் நகரத்தில் சிந்துலன் என்னும் பெயர்கொண்ட ஒரு மன்னனிருந்தான். அவனுக்கு அவனுடைய விருத்தாப்ய தசையில் ஒரு புதல்வன் பிறந்தான். சிந்துலன் அவனுக்குப் போஜன் என்று பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்து வந்தான்.

சிந்துலனுக்கு முஞ்சன் என்னும் பெயர்கொண்ட ஒரு தம்பி யிருந்தான். அவன் நல்ல சாமர்த்தியவான்; திட சரீரமுடையவன்; கல்வி கேள்விகளிலே தேர்ந்தவன். அண்ணனாகிய சிந்துலனுக்கு அடங்கி நடக்கும் தன்மையுடையவன். பெரும்பான்மையும் இராஜ்ய காரியங்களை அவனே கவனித்து வந்தான்.

தம்பி முஞ்சனுடைய துணைகொண்டு இராஜ்ய பரிபாலனம் செய்துவந்த சிந்துலன் ஒருகுறைவுமில்லாமல் வாழ்ந்துவந்தான். அப்படி யிருக்கையில் போஜன் ஐந்தாவது பிராயமடைந்தான். அப்பொழுது சிந்துலன் "நமக்கு மூப்பு மேலிட்டுவிட்டது. இனி மரணம் சமீபத்திலிருக்கிற தென்பது திண்ணம். இராஜ்யத்தை மகன் போஜனிடம் ஒப்புவிப்பதற்கில்லை. அவன் இளைஞனாயிருக்கிறான். என்ன செய்வது" என்று நெடுநேரம் ஆலோசித்தான்.

அப்பால் அவன், "தம்பி முஞ்சனிடந் தான் இராஜ்யத்தை ஒப்புவிக்கவேண்டும். அவன் அதிக சாமர்த்தியவானாயும் இராஜ்ய பரிபாலனம் செய்வதற்குரிய தன்மை வாய்ந்தவனாயுமிருக்கிறான். அவனை நீக்கிப்



போஜனுக்குப் பட்டங்கட்டினால் அவன் மனஸ்தாபமடைவான். அந்த மனஸ்தாபத்தினால் பின்னால் அவன் நமது பிள்ளையைக் கொன்றாலும் கொன்றுவிடுவான். பொருளாசை பொல்லாது. பாபத்திற்கு லோபமே காரணம். லோபிக்குத் தாய்தந்தை, உடன்பிறந்தார், உற்றார், ஊரார் முதலிய ஒருவருமே கிடையாது. அவன் யாரையும் வஞ்சிப்பதிலேயே நோக்க முடையவனாயிருப்பான். அந்த லோபமே கோபத்திற்குக்காரணம். கோபம் பாபம் சண்டாளம் என்பதுபோல் கோபத்தினால் மானக்கேடுகளுண்டாகும். ஆகையினால் போஜனுக்குப் பட்டங்கட்டி முஞ்சனுக்கு மனஸ்தாப முண்டாக்கி வைப்பது தவறாகும். முஞ்சனிடம் இராஜ்யத்தையும் போஜனையும் ஒப்புவிப்போம். போஜன் தக்கவயதை அடைந்ததும் அவனிடம் அரசை ஒப்புவிக்கும்படி செய்வோம். இதுவே நல்ல ஆலோசனை" என்று தீர்மானங்கொண்டான்.

சிந்துலன் தான் கொண்ட இந்தத் தீர்மானத்தைத் தன் அமைச்சர்களுடனிருந்து ஆலோசித்து அவர்களுடைய சம்மதம் பெற்றான். அப்பால் முஞ்சனை ஒரு நல்ல நாளில் சபைக்குவரவழைத்து வீற்றிருக்கச் செய்து அவன்மடியில் குழந்தை போஜனை உட்கார வைத்து; எல்லோருடைய முன்னிலையிலும் தன் தீர்மானத்தைத் தெரிவித்து முஞ்சனுடைய சம்மதத்தையும் பெற்று அரசுரிமையை அவனிடம் ஒப்புவித்தான்.

முஞ்சன் அரசுரிமை பெற்றபிறகு ஜோதிட சாஸ்திரத்தில் வல்லவரான ஓர் அந்தணர் அவனுடைய சபைக்குவந்தார். முஞ்சன் அவரை வணங்கி வீற்றிருக்க உபசரித்துத் தன் ஜாதகத்தைக் காட்டினான்.

அவர், அதைக் கவனித்து முஞ்சன் பிறந்தது முதல் இதுவரையில் நடந்தவைகளையெல்லாம் தெரிவித்தார். அவரிடம் முஞ்சன் சந்தோஷமடைந்து குருகுலவாசத்திலிருந்த போஜனை உடனே வரவழைத்து அவனையும் அவனுடைய ஜாதகத்தையும் அவருக்குக்காட்டிப் பலாபலன் கூறும்படி கேட்டுக்கொண்டான்.

ஜோதிடர், "போஜனை அனுப்பிவிடுங்கள். இவனுடைய அவயவலக்ஷணங்களைக் கொண்டு நான் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்து கொண்டேன்" என்று கூறிப் பின் அவன் ஜாதகத்தைக் கவனித்து, நடந்தவைகளைச்சரியாய் நவின்று அப்பால், "போஜன், தக்ஷிணதேசத்தையும் கௌடதேசத்தையும் ஐம்பத்தைந்து வருஷம் ஏழுமாதம் மூன்று நாள் வரையில் பரிபாலிப்பான்" என்று தெரிவித்தார்.

இதைக்கேட்டதும் முஞ்சனுடைய மனம் திடுக்கிட்டுத் தியங்கியது; பெருங்கவலையிலாழ்ந்தது. ஆயினும் முஞ்சன் அதனை வெளிக்குக் காட்டவில்லை; ஜோதிடனை நோக்கி, 'ஸந்தோஷம். வித்தை தாயைப்போல் காப்பாற்றுகிறது. தந்தையைப் போல் நல்ல காரியத்திலே பிரவேசிக்கச்செய்கிறது. கொண்ட மனைவியைப் போல் மனத்திற்கு மகிழ்ச்சியைத்தருகிறது. துக்கத்தைத் நீக்குகிறது. பெரிய புகழைத்தருகிறது. கற்பகத்தருவைப்போல் வேண்டியவற்றைக் கொடுக்கிறது. அந்தச் செல்வம் படைத்த தங்களுடைய பெருமையை அறிந்தேன்" என்று கூறித் தக்கவெகுமதி யளித்து அவரை அனுப்பினான். அப்பால் சபை கலைந்தது.



முஞ்சன் சபையிலிருந்து எழுந்து செல்லும்போது அவனைக் கவலை பின் தொடர்ந்தது. அதனால் அவன் வேறொன்றையும் கவனியாமல், "அந்தோ இந்த ராஜ்யம் போஜனிடம் சேர்ந்து விடுமானால் நான் நடைப்பிணந்தான். பொருளே ஒருவனுக்குப் புத்தி கூர்மையையும் தெளிவையும் கொடுக்கிறது. பொருளை முயற்சியுடன் சேர்ப்பவனே பெருமை யடைகிறான். மெய்வருத்தம் (தேககஷ்டம்) பாராமலும் சாமர்த்தியத்துடனும் ஊக்கத்துடனும் புத்தியைச் செலுத்தி முயற்சி செய்பவனுக்கு முடியாதது எது? எந்த விதத்திலேனும் பகைவர்களுடைய சம்பத்தைக் கிரகிக்க முயற்சி செய்யவேண்டும். தாக்ஷிண்யமுள்ளவனுக்கும் சந்தேகமுள்ளவனுக்கும் உலக அபவாதத்திற்கு அஞ்சுகிறவனுக்கும் சம்பத்து உண்டாகாது. தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்புகிறவன், அவமானத்திற்குப் பயப்படுவது கூடாது. அறிவிலனே செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் காரியத்திற்குக் கேடு தேடிக்கொள்வான்"—என்று ஆலோசனை செய்து தன் ஆலோசனையை நிறைவேற்றுவதெனத் தீர்மானமுங் கொண்டான்.

இதன்பின் ஒருநாள் முஞ்சன் தன் சிற்றரசரில் ஒருவனான வத்ஸராஜன் என்பவனை வரவழைத்து ஏகாந்த ஸ்தலத்திலிருந்து அவனிடம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லி, "இன்று இரவு முதல்ஜாமத்தில் புவனேசுவரி ஸந்நிதியில் போஜனைப் பலிகொடுத்து அவனுடைய தலையை என்னிடம் கொண்டுவந்து காண்பிக்கவேண்டும்" என்றான். வத்ஸராஜன், "ஒரு சிறிய குழந்தையை இவ்வாறு கொல்வது மகா பாதகமாவது

மன்றிக் கொடிய அநீதி" என்று கூறி அவனுடைய அந்த உத்தரவை மாற்றும்படி வேண்டிக்கொண்டான். முஞ்சன், ஒரு நீதிக்கும் கட்டுப்படாமல் தன்மனப் போக்கின்படி நின்றமையால் வத்ஸன் அவனுடைய கட்டளையை நிறைவேற்றத் துணிந்து அன்றிரவு போஜனைப் பல்லக்கிலேற்றிக்கொண்டு புவனேசுவரியின் ஆலயம் போய், அவனிடம் முஞ்சனுடைய கட்டளையைத் தெரிவித்தான்.

போஜன் அதைக் கேட்டதும் வத்ஸனைப்பார்த்து, "ஸ்ரீராமபிரான் வனத்துக்குச் சென்றான். பலி சக்கரவர்த்தி பாதாளம் சென்றான். பாண்டவர்கள் வனத்துக்குச் சென்றார்கள். நளன் அரசை இழந்தான். இராவணன் நாசமடைந்தான். இவையனைத்தும் காலத்தின் கொடுமையால் நேர்ந்தனவன்றோ? ஆதலின் காலத்தின் வசமான நான் மாத்திரம் அதனைக் கடப்பதெப்படி?—நான் ஒரு கடிதம் தருகிறேன். அதனை முஞ்சனிடம் கொடு" என்று கூறி, அருகிலிருந்த ஆலமரத்திலிருந்து இரண்டு இலைகளைக் கிள்ளினான்; பிறகு தன் கையைக் கிழித்து அதிலிருந்து பெருகிய இரத்தத்தை ஓர் இலையில் பிடித்துக்கொண்டான்; அப்பால் ஒருசிறு குச்சியை எடுத்து அந்த இரத்தத்தில் தோய்த்து மற்றொரு இலையில் ஏதோ எழுதி அதனை வத்ஸனிடம் கொடுத்து, "இதனை முஞ்சனிடம் கொடு—தவறாதே. இனி நீ அரசனுடைய கட்டளையை நிறைவேற்று" என்று ஊக்குவித்தான்.

அப்பொழுது வத்ஸனுடைய அருகிலிருந்த அவனுடைய சகோதரன் வத்ஸனைப்பார்த்து, "தருமம் என்று



தான் நண்பனைப்போல் ஒருவனைத்தொடர்ந்து வருவது. எவனொருவன் தருமத்தை அலக்ஷியம் செய்கிறானோ அவன் மகாபலவானாயிருந்தாலும் பலமற்றவனாவான். பொருள்படைத்த சீமானாயிருந்தாலும் தரித்திரனாகவே கருதப்படுவான். சகல சாஸ்திர பண்டிதனாயிருந்தாலும் அவன் பாமரனேயாவான். வாலிபனும் மரணமடைகிறான். வயோதிகனும் மரணமடைகிறான். மரணம் அப்படி நேரிடுவதை நீ பார்த்திருந்தும் இந்தக்கொடிய அதர்மத்தைச் செய்யத் துணிந்ததேன்"? என்று கேட்டான். சகோதரன் இவ்வாறு தருமத்தை யெடுத்துக் காட்டவே, வத்ஸராஜன் போஜனை வணங்கி "நான் பெரிய அபராதி. என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறிப் போஜனை இரதத்திலேற்றி வைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு நகரத்திற்குள் வந்து ஒரு பத்திரமான இடத்தில் அவனை வைத்துவிட்டு, உடனே போஜனுடைய சிரசைப்போல் ஒன்று செய்து எடுத்துக்கொண்டு முஞ்சனிடம்போய் அதனைக்காட்டி, "தமது கட்டளையை நிறைவேற்றிவிட்டேன்" என்று வணங்கினான். முஞ்சன், "நல்லது; போஜனுடைய தலையைவெட்டும்போது அவன் ஏதாவது சொன்னானோ?" என்று கேட்டான்.

வத்ஸன் "பிரபுவே, ஒரு நிருபம் எழுதிக்கொடுத்திருக்கிறான்," என்று கூறிப் போஜன் எழுதிக்கொடுத்த இலையிலிகிதத்தை முஞ்சன் கையில் வணக்கத்துடன் கொடுத்தான். முஞ்சன் அதைப்பெற்றுக் கொண்டதும் போஜனுடைய சிரசை ஒரு பக்கத்திலே கொண்டு போய்ப் புதைத்துவிடும்படி வத்ஸனுக்குக் கட்டளை

விட்டனுப்பிவிட்டுத் தான் ஒரு பக்கம் உட்கார்ந்து லிகிதத்தைப் படிக்கலானான்—

𑌮𑌾𑌨𑍍𑌧𑌾𑌤𑌾 𑌚 𑌮𑌹𑍀𑌪𑌤𑌿𑌃 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌾
𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑍋 𑌗𑌤𑌃
𑌸𑍇𑌤𑍁𑌰𑍍𑌯𑍇𑌨 𑌮𑌹𑍋𑌦𑌧𑍌 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌃
𑌕𑍍𑌵𑌾𑌸𑍌 𑌦𑌶𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋
𑌯𑌾𑌤𑌾 𑌦𑌿𑌵𑌂 𑌭𑍂𑌪𑌤𑍇
𑌨𑍈𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑌂 𑌗𑌤𑌾 𑌵𑌸𑍁𑌮𑌤𑍀
𑌨𑍂𑌨𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ॥

மாந்தாதா|ச மஹீபதிஃ கிருதயுகா
லங்காரபூதோ கதஃ
சேதுர்யேந மஹோததௌ விரசிதஃ
க்வாஸௌ தசாஸ்யாந்தகஃ
அந்யேசாபி யுதிஷ்டிர ப்ரப்ருதயோ
யாதாதிவம் பூபதே
நைகேநாபி ஸமம்கதா வஸுமதீ
நூநம் த்வயா யாஸ்யதி.

வேந்தே, கிருதயுகத்தில் இப் புவியையாண்ட மாந்தாதாவும் காலஞ்சென்றான். திரேதாயுகத்தில் சமுத்திரத்திற்சேதுபந்தனஞ் செய்து கடல்கடந்து இலங்கை சென்று இராவண வதம் செய்த ஸ்ரீ ராம பிரானும் காலஞ்சென்றான். துவாபரயுகத்தில் புவியையாண்ட தருமபுத்திரர் முதலியவர்களும் காலஞ் சென்றனர். அப்படிப்பட்ட அவர்கள் ஒருவருடனேனும் இந்த பூமி சென்றதில்லை. உம்முடன் தான் வருகிறதுபோலிருக்கிறது!

இவ்வாறு வரைந்திருந்த லிகிதத்தைப் படித்ததும் முஞ்சன் தாங்கமுடியாத துக்கமும் சோகமும்



அடைந்து, அந்தோ! அந்தோ! என்று அரற்றித் தான் வீற்றிருந்த ஆசனத்திலிருந்து கீழேவிழுந்து மூர்ச்சையானான். அவனை அவன் மனைவி தூக்கியெடுத்து உட்காரவைத்து ஆசுவாசப்படுத்தினாள். முஞ்சன் மூர்ச்சை தெளிந்து கண் விழித்ததும் தன் மனைவியை நோக்கி, "நான் புத்ரவதஞ் செய்த மகா பாவி! என்னைத் தொடாதே!" என்று கூறிப் பெரு வியசனத்துடன் ஏவலாளனை அழைத்து "ஓடிப்போய் உடனே புரோகிதரை யழைத்துவா" என்று கட்டளையிட்டனுப்பினான். அவன் போய் உடனே புரோகிதரை யழைத்துவந்தான். புரோகிதர் வந்ததும் முஞ்சன் அவரை வணங்கி வரவேற்று ஆசனத்தில் வீற்றிருக்க உபசரித்து "ஸ்வாமி, நான் புத்திரவதம் செய்து விட்டேன். அந்தப் பாதகம் தீருவதற்கு ஏதேனும் பிராயச்சித்தம் கூறவேண்டும்" என்று கேட்டான்.

புரோகிதர், "உம்மிடம் நம்பிக்கைகொண்டு ஒப்புவிக்கப்பட்ட இளைஞனை நீர் கொன்றுவிட்டபடியால் அக்கினிப்பிரவேசம் செய்து உயிர் விடுவதே இதற்குத் தக்க பிராயச்சித்தம்" என்றார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"—என்று தமிழ் வேதம் கூறுகின்றதல்லவா?

புரோகிதர் கூறியபடி முஞ்சன் அக்கினிப்பிரவேசஞ் செய்ய ஆயத்தமானான். இதனை யறிந்த நகரமுழுவதும் பெரிய கலவரமடைந்தது. இப்பொழுது வத்ஸன் தான் போஜனை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்தி

ருப்பதை மந்திரி புத்திசாகரன் என்பவனிடம் இரகஸ்யமாகக் கூறினான். புத்திசாகரன், உடனே முஞ்சனைக் காப்பாற்றுவதற்கு யுக்தி தேடலானான்.

அப்பால் கொஞ்சநேரத்திற்கெல்லாம் மந்திரி ஒரு யோகியுடன் முஞ்சன்முன் பிரவேசித்து வணங்கினான். முஞ்சன் யோகியை வரவேற்று உபசரித்து வீற்றிருக்கச்செய்தான். யோகி, 'ஸர்ப்பம் தீண்ட இறந்தவனையும் கொலையுண்டவனையும் அஸ்திரத்தினால் உயிரிழந்தவனையும் நான் பிழைப்பிப்பேன்'' என்றான்.

முஞ்சன், உடனே மகிழ்ச்சியடைந்து அவரை வணங்கி, "அப்படியானால் மகா பாதகஞ்செய்த எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும்" என்று கூறி வணங்கி, "மகா பாபியாகிய என்னாலே கொல்லப்பட்ட என் மைந்தனை எழுப்பியருளல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

யோகி, "அப்படியே செய்வேன். இந்த உமது மந்திரியை ஹோம திரவியத்துடன் மயானத்துக்கு அனுப்பும்" என்று சொன்னான். முஞ்சன் உடனே அமைச்சனுக்குக் கட்டளையிட்டான். அமைச்சன் அப்படியே யோகியுடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு இடு காட்டிற்சேர்ந்தான். அங்கே வத்ஸராஜன் போஜனை அழைத்துக் கொண்டுபோய்விட்டு மந்திரியைப் பணிந்தான். அப்பால் மந்திரி சற்று நேரத்திற்கெல்லாம் போஜனையும் யோகியையும் ஒரு பல்லக்கில் வைத்தழைத்துக்கொண்டு அரண்மனை வந்து முஞ்சனிடம் போஜனை ஒப்புவித்து அவனைப்பணிந்து நின்றான். முஞ்சன் தன்பிழையுணர்ந்து வருந்திப்பின்பு போஜனை அருகி



லழைத்துத் தழுவி வீற்றிருக்க உபசரித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு "பொருளாசையினால் மனம் மாறியபடியால் இந்தக்கொடுமை செய்யத் துணிந்தேன். பொருளாசையைப்போல் தீமைவிளைப்பது எதுவுமில்லை'' என்று கூறி மந்திரியையும் யோகியையும் புகழ்ந்து மறுநாளே போஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்தான்; அதன் பின் மறுநாள் சகல வைபவங்களுடன் போஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து, தன்மைந்தன் ஜயந்தன் என்பவனை இளவரசனாக்கிப் பின் தன்மனைவியுடன் வனஞ்சென்று தவம்புரியலானான்.

---

## ஹாஸ்யம்.

கடம்பன் என்னும் ஒரு தடியன் ஒரு கட்டிலின் மேல் குப்புறப் படுத்துக்கொண்டிருந்தான். இடும்பன் என்னும் பெயர்கொண்ட அவனுடைய நண்பன், அவனைப் பார்த்து "என்டா கடம்பா தூங்கிக்கொண்டிருக்கிறாயா? அதற்குள்ளே என்ன தூக்கம்? இன்னும் ஊர் அடங்கவில்லையே!" என்று அவனைத் தட்டியெழுப்பினான். கடம்பன்—தூங்கவில்லை. எதையோ ஆலோசித்துக்கொண்டு சும்மா படுத்துக்கொண்டிருக்கிறேன்—என்றான்.

கடம்பன்—ஆனால் எனக்கு ஒரு உதவி செய்கிறாயா?" என்று கேட்க இடும்பன்—ஊம்—என்றான்.

கடம்பன்— அவசரமாய் ஐந்து ரூபாய் வேண்டியதாயிருக்கிறது. எழுந்து எடுத்துக் கொடு. நான்கு நாட்களில் தந்துவிடுகிறேன்.

இடும்பன்—ஊம்—போடா—தூங்குகிறேனடா— எழுப்பாதே! தூக்கத்தில் எழுப்பினால் எனக்குக் கோபம் வரும். போடா என்று இழுத்துப் போர்த்துப் படுத்துக் கொண்டு குறட்டைவிடத் தொடங்கினான்.

# ஸுகன்யை

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே இவர்களும் அவர்களைப்போலவே சங்கடத்திற்குள்ளாய்த் தவிக்கின்றபடியால், அரசனைக் கண்டதும் இராணி தனக்கும் மற்றவர்களுக்கும் ஏககாலத்தில் நேர்ந்திருக்கும் துன்பத்தைக் கூறி வருந்தினாள். அரசனும் தமது நிலைமையைக்கூறி, "இது இங்குள்ள தவமுனிவர்க்கு நம்முள் யாரோ செய்த தீங்கினால் விளைந்திருக்கிறது என்று நான் தீர்மானிக்கிறேன். உங்களில் யாரேனும், அப்படி அபசாரம் செய்ததுண்டானால் விசாரி" என்று தன்மனைவியிடம் தெரிவித்தான். இராணி, "நாதா நான் அப்படி யொன்றும் செய்யவில்லை" என்று கூறி, மற்ற மாதர்களை விசாரித்தாள். அவர்களும் "நாங்கள் அப்படி யொன்றும் செய்யவில்லை" என்று கூறிப் பணிந்தனர்.

இப்பொழுது ஸுகன்யை தானே தன் தந்தையின் முன்போய் நின்று, "என் ஐயரே, என்னை மன்னிக்கவேண்டும். நான் இந்தத் தபோவனத்தில் ஒரு பக்கம் பூக்கொய்தேன். அங்கொரு புற்று வளர்ந்திருந்தது. அதைக்கண்டு வியப்புற்று அதனை உற்று நோக்கினேன். அதிலிருந்து பளபளவென்று ஏதோ தெரிந்தது. அதனை நான் பூச்சி என்றெண்ணி ஒருகுச்சியால் குத்தினேன். குத்தியதும் அந்தப் புற்றிலிருந்து ஹா! ஹா! என்று யாரோ கத்துவதுகேட்டது. உடனே அங்கிருந்து விலகிவிட்டேன்" என்று கூறி வருந்தினாள்.



இதைக் கேட்டதும் வேந்தன், "ஸுகன்யா நீ வருந்தாதே! அந்தப்புற்று எங்கே இருக்கிறது காட்டு" என்று கூற; ஸுகன்யை அரசனையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டுபோய் அந்தப்புற்றைக் காட்டினாள். அரசன், அந்தப் புற்றை நோக்கிக் கைகுவித்து வணங்கி நின்று, "ஸ்வாமி தபோதனரே, அடியேன் சர்யாதி அநந்தகோடி வந்தனம் செய்கிறேன். ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று கூறினான். முனிவர், "சர்யாதி ராஜாவா, வாரும். உமக்கு மங்களமுண்டாகக் கடவது! என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

அரசன், "அடியேன் என் மனைவிமக்களுடன் இப்பக்கம் வேட்டையாட வந்தேன். மாதர்களையெல்லாம் இந்தத் தபோவனத்தில் இருக்கச் செய்துவிட்டு நான் வேட்டையாடப் போனேன். அப்பொழுது இங்கே தன் தோழிகளோடு பூக்கொய்துகொண்டு விளையாடிய என் புதல்வி ஸுகன்யை என்பவள், இந்தப் புற்றைக் கண்டு வியந்து நோக்கினளாம். அப்பொழுது இதனுள் பளபளவென்று மின்னிய தங்கள் கண்களை அவள், ஏதோ பூச்சியென்று எண்ணிக்குச்சியினால் குத்திவிட்டாளாம். அவள் சிறுமியாதலால் அவள் செய்த பிழையை மன்னித்தருளல் வேண்டும். நாங்களெல்லோரும் மலஜல விசர்ஜனம் செய்யமாட்டாமல் வருந்துகிறோம். காரணம், தங்களுக்கு அவள் செய்த அபசாரமென்றே நிச்சயிக்கின்றேன்" என்றான்.

தபோதனர், "வேந்தே, நான் என்னுடைய கண்கள் போனதைக் குறித்து வருந்துகிறேனே யொழிய எனக்கு அப்படிப்பட்ட தீங்கு செய்த பேதை நான்

நினைந்து கொள்ளவே இல்லை. நான் கண்களை இழந்தது விதிவசமென்று தீர்மானித்துக்கொண்டேன். ஆகையினால் நீங்கள் துன்புறுவதற்கு, ஸுகன்யையின் செய்கையே காரணமாகும். அந்தப் பெண்மணியின்மீது நான் இப்பொழுது கோபங்கொள்ளவில்லை. அவளை வெறுப்பதனால் நான் அடையும் பயன் யாது? இனி எனக்குக் கண் வரப்போகிறதா? அறிஞன் பயனற்ற செய்கையைச் செய்வானா? அரசே, நான் இப்பொழுது வயது முதிர்ந்த கிழவனாயிருக்கிறேன். இதுவரையில் எனக்குக் கண்களிருந்தமையால் நான் பிறருதவியின்றிக் கந்த மூல பலங்கள் சேகரித்துண்டு காலங்கழித்து வந்தேன். இப்போது அந்தகனாய் விட்டேன். இனி நான் எப்படி பிறருதவியின்றிக் காலத்தைக் கடத்தப்போகிறேன்? என்னிடத்தில் அன்புடையவர்களை யல்லாமல் வேறு எவரும் எனக்குவேண்டிய பணிவிடைகளை அன்போடும் செய்யமாட்டார்கள். ஆகையினால் உமது பெண் ஸுகன்யாவை எனக்கு மணஞ்செய்து கொடுத்துவிடும். அந்தப்பெண் நல்லகுணமுடையவளென்று எனக்குத் தெரிகிறது. அவள் எனக்கு என் இஷ்டப்படி பணிவிடைபுரிவாள்; என் கஷ்ட சுகங்களில் ஈடுபடுவாள். அப்படிச் செய்வீராயின் நானுய்வேன். உங்களுக்கு இப்பொழுதுண்டாயிருக்கும் தேக பாதையை ஜகதீசன் நீக்கியருளுவார்" என்றார்.

இதைக் கேட்டதும் அரசன் திடுக்கிட்டு "அந்தோ, இந்தத் தொண்டுக் கிழவருக்கு என் அருமைப் புதல்வி ஸுகன்யாவை நான் எப்படிக் கொடுப்பேன். இதைவிட நான் அவளைப் பாழுங்கிணற்றிலே தள்ளுவது



மேலாமன்றோ? ஜகதீசா இப்படியும் ஒரு விதியிருக்க வேண்டுமோ?" என்று கருதி மனங்கலங்கி மௌனமாயிருந்தான்.

இப்போது ஸுகன்யை, "ஆகா, என்னாலல்லவா என் தந்தையும் மற்றும் எல்லோரும் பெரும் பாதைக்குள்ளாகித் தவிக்கின்றனர். பிறர் கஷ்டத்தைக்கண்டும் என்னைப்போன்ற நல்ல குலப்பெண் ஒருத்தி சும்மா இருப்பது தகுமா? அது பெரிய பாபமாகாதா? நான் இந்தக் கிழவருக்கு வாழ்க்கைப்பட்டால் இவ்வளவு பேருடைய கஷ்டமும் தீருவதாயிருக்க நானேன் இவர்க்கு வாழ்க்கைப்படக்கூடாது? இயல்வது கரவேல் என்பது பெரியார் போதனையல்லவா? இந்தக் கிழவர்க்கு நான் மனைவியாக வேண்டுமென்பது ஈச்வரனுடைய ஸங்கல்பமென்று நன்றாய்த் தெரிகிறது. இல்லாவிட்டால் நானேன் புற்றில் மறைந்திருக்க இந்தக்கிழவருடைய கண்களில் குச்சியையெடுத்துக் குத்துகிறேன்? எது வரினும் வரட்டும். என் தந்தை இப்பொழுது படுந்துயரம் என்னால் பொறுக்க முடியவில்லை. ஆதலின் இந்தக்கிழவரைநான் மணக்கின்றேன்" என்று கருதித் தந்தையின் முன்னேபோய் வணங்கி நின்று, "எந்தையே, என் பொருட்டு நீங்கள் கஷ்டப்படுவது நியாயமல்ல. என்னை இந்தத் தபோதனர் மணஞ்செய்து கொள்ள விரும்புகிறபடியால் அவர்க்கே என்னை மணஞ் செய்து கொடுத்து விடுங்கள். உங்களுடைய துன்பம் நீங்குவதன் பொருட்டு நான் இவரை மணஞ்செய்து கொள்ள இச்சித்து விட்டேன். இனியும் ஆலோசனை செய்யாமல் பெரியோருடைய கருத்தின்படி செய்யுங்கள். பெரியோருடைய சந்தோஷமே

நமது பெரும்பாக்கியம்; நான் இந்த விஷயத்தில் சிறிதும் கலங்கவில்லை. எல்லாம் ஈசன் செயல் என்பது பெரியார் துணிபாதலினால் நானும் அங்ஙனமே இப்போது நினைக்கின்றேன். நான் இந்தப் பெரியார்க்கு வாழ்க்கைப்படுவேனாகில் இவர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை மனமகிழ்ச்சியோடு செய்வேன்; என் கற்பிற்கும் நமது குலத்துக்கும் அவர் குலத்துக்கும் எந்தவிதமான குறைவும் நேரிடாமல் நடந்து வருவேன். இந்தப் பெரியாரையன்றி வேறு எவரையும் மனதில் கொள்ளேன். ஆகையினால் தாமதம் செய்யாமல் மகரிஷியின் விருப்பத்தை நிறைவேற்றியருளும்" என்று கூறினாள்.

ஸுகன்யை இவ்வாறு கூறுவதைக்கேட்ட அரசன் மிகவும் வருத்தமடைந்து, நெடுநேரம் ஆலோசித்தபடியிருந்து, அப்பால் புதல்வியைப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து மளமளவென்று நீர் பெருகியது. எல்லோரும் என்னே விதியிது என வியப்படைந்தனர்.

ஸுகன்யை, தந்தையைப்பார்த்து; "ஏன் விசனப்படவேண்டும்? விதியைக் கடக்க யாரால்முடியும்? என் நெஞ்சம் சஞ்சலப்படவில்லை; துணிவுடனிருக்கிறது. கவலைப்படாமல் காரியத்தை முடியுங்கள்" என்றாள்.

அரசன் "ஸுகன்யை, உன்னுடைய துணிவான சொல்லே என்னை இதில் இணங்கும்படி தூண்டுகிறது. நீ மனம் சோர்வாயானால், நான் எதையும் கவனிக்கமாட்டேன். எனக்கு உன்னைவிட மேலானதொன்றுமில்லை. உன்னுடைய க்ஷேமமொன்றே எனக்கு எல்லா



நன்மைகளையும் தருவதாகும். உன் விருப்பப்படி உன்னை இந்தத் தபோதனர்க்குக் கன்னிகாதானம் செய்கிறேன். எங்கும் நிறைந்த இறைவன் என்றும் துணையாயிருப்பான். தபோதனருடைய திருவுளக் குறிப்பறிந்து நடந்துவருவாயானால் நீ சகல நன்மைகளையும் அடைவாய். பதிவிரதைகளுக்குக் கிட்டாத பாக்கியமுண்டோ உலகத்தில்?" என்று கூறி மகரிஷியைப் பணிந்து, "ஸ்வாமி தமது திருவுளப்படி ஸுகன்யாவைத் தமக்குக் கன்னிகாதானம் செய்கிறேன்" என்று வாக்களித்தான்.

வாக்களித்த மாத்திரத்தில் எல்லோரும் தங்கள் தேகபாதை நீங்கிச் சுகமடைந்தனர். அரசனும் ஏனையரும் அதுகண்டு ஆனந்தமடைந்தனர். முனிவர் நகரத்திற்குள்ளே வர மறுத்தமையினால், அதன் பின் ஒரு நாள் நல்ல முகூர்த்தத்தில் அரசன் தன்மகளை அவருக்கு மணஞ்செய்துகொடுத்தான்; அப்பால் ஆடையாபரணங்களையும், அளவிறந்த பொருளையும் மனமுவந்தளித்தான்.

முனிவர் அப்பொழுது அரசனை நோக்கி, "வேந்தே, கந்த மூலபலங்களையுண்டு இந்தக் காட்டிலே வசிக்கப்போகும் எங்களுக்கு இவையெல்லாம் எதற்கு? இவை எங்களுக்கு வீண் மனக்கவலையைத் தருமே யொழிய வேறு பயனொன்றும் தாரா. ஆகையினால் இவைகளையெல்லாம் நீரே எடுத்துக்கொண்டு போம்" என்றார்.

ஸுகன்யையும் தன் தந்தையை நோக்கி, "பிதாவே விலை மதித்திடற்கரிய இந்த ஆடைகளும் அணிகலன்களும் என்னுடைய இந்த நிலைமைக்குச் சிறிதும் ஏற்றவையல்ல. இவற்றிற்குப் பதிலாக எனக்கு மரவுரியும் மான்தோலும் கொடுத்தாற்போதும்" என்றாள். (வரும்)

# இராமதாஸர்.

(92-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்படி கோபன்னா ஸ்ரீராம பக்தியில் ஈடுபட்டவனாயிருந்தும் தாசில் வேலையைச் சரியாய்ச் செய்து வந்தபடியால் சிலவருஷங்களுக்குள் பொக்கிஷ சாலையில் ஆறுலக்ஷம் வராகன் சேர்ந்தது. இந்தச் சமயத்தில் கோபன்னா ஒரு நாள் அவ்வூரிலிருந்த ஸ்ரீராமபிரானுடைய ஆலயத்திற்குப் போய் ஸ்வாமி தரிசனஞ் செய்தான். கோவில் பழமையானதாகையினால் கர்ப்பகிரகம் தவிர மற்ற இடங்களெல்லாம் இடிந்திருந்தது. அது கண்ட கோபன்னா "இந்த ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டும்" என்று ஒரு சங்கற்பம் செய்து கொண்டான்; பின் வீட்டிற்குப் போனதும் நெடுநேரம் ஆலோசித்துப் பொக்கிஷத்தில் மீதிருக்கும் ஸர்க்கார்ப்பணம் ஆறுலக்ஷம் வராகனையும் செலவழித்துத் தன் சங்கற்பத்தை முடிப்பதெனத் தீர்மானஞ் செய்து கொண்டான்; பின்னர் ஒரு நல்ல நாளில் கோவில் கட்டத் தொடங்கி வெகு துரிதமாக வேலையை நடத்திச் சொற்ப நாட்களில் "அற்புதம்! அதிசயம்" என்று எல்லோரும் புகழும்படியான வேலைப்பாடுகளை அமைத்துக் கோவிலை மிக உன்னதமாகக் கட்டிமுடித்துப் பரமானந்த மடைந்தான்.

கோபன்னா ஸ்ரீராமபிரானிடம் கொண்டிருந்த அன்பின் மேலீட்டினால், ஸர்க்கார்ப்பணத்தை அவர்கள் உத்தரவின்றிச் செலவழித்தல் அநீதியென்பதையும் கவனியாமல் இவ்வாறு செலவழித்து விட்டான். இங்கிப்படியிருக்கையில் ஐதராபாத்தில் இராஜாங்கக்



கணக்கில் இராஜ்யத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பரிசோதித்தனர். பத்ராஜலம் தாசிலாகிய கோபன்னாவிடமிருந்து நெடு நாட்களாகப் பகுதிப்பணம் வராமலிருப்பது தெரியவந்தது. உடனே அவர்கள் அந்த விஷயத்தில் மந்திரிமார்களாகிய அக்கன்ன மாதன்னாவினிடம் தெரிவித்தார்கள். அவர்கள் கோபன்னாவின் மாமன்மார்களல்லவா? அவர்களுடைய சிபார்சினால் தானே கோபன்னாவிற்குத் தாசில் வேலை கிடைத்தது? அவர்கள் கோபன்னா பணம் வசூல் செய்யவில்லையென்பதைக்கேட்டதும் மிக வருத்தமடைந்து அதைப் பற்றி விசாரித்து வரத் தங்களுக்கு ஆப்தனான ஒருவனைக் கோபன்னாவிடம் அனுப்பினார்கள்.

அவன் போய்க் கோபன்னாவைக்கண்டு கேட்டபொழுது, கோபன்னா "இது வரையில் பொக்கிஷத்தில் ஆறு லட்சம் வராகன் சேர்ந்திருந்தது. அந்தப் பொருளையெல்லாம் செலவழித்து ஸ்ரீராமபிரானுடைய திருக்கோவில் கட்டி முடித்து நவாபிற்குப் பெரிய புகழ்தேடியிருக்கிறேன். அவர்க்கும் பிரஜைக்கும் இதனால் கீர்த்தியுண்டாகும். இந்த ஆறு லக்ஷம் வராகனையும் வெகு சீக்கிரத்தில் நவாபிற்கு அனுப்பிவிடுவேன். ஸ்ரீராமன் அதற்கு அனுக்ரஹம் செய்வார்" என்று கூறி யனுப்பினான்.

அவன் இதைக் கேட்டதும் பெருவியப்புடன் ஐதராபாத்துக்குச் சென்று மந்திரி மார்களிடம், கோபன்னா செய்த விசித்திரமான செய்கையையும் அவனுடைய மன நிலைமையையும் கூறினான். மந்திரி மார்களிருவரும் அதைக் கேட்டதும், "அந்தோ! தெய்வப் பித்துப்பிடித்த இந்த மூடனை உத்தியோகத்தில்

அமர்த்தியது பெரிய தவறு. இவன் செய்கையை நவாபு அறிந்தால் கொடுங் கோபங்கொள்வார். இதற்கென்ன செய்கிறது" என்றெண்ணி வருத்தங்கொண்டு செய்வதின்னதென்று தெரியாமல் கவலையுடனிருந்தனர்.

இப்படி இருக்கையில் இராஜாங்க உத்தியோகஸ்தர்களில் சிலருக்குக் கோபன்னாவினுடைய செய்கை தெரியவந்தது. அவர்கள் உடனே தானேஷாவிடம் போய்ச் சொல்லி, "கோபன்னா செய்தது பெரிய இராஜத் துரோகம். அவனை உடனே வரவழைத்து விசாரிக்கவேண்டும்" என்று கூறினார்கள். நவாபு கேட்டதும் கடுங் கோபங்கொண்டு மந்திரிகளை வரவழைத்து, "பரமயோக்கியனைப்போல் நடந்துவந்த உங்கள் கோபன்னாவின் செய்கையைக் கவனித்தீர்களா? இவ்வளவிற்கும் நீங்கள்தான் காரணம். உங்களுடைய துணையின் பலங்கொண்டுதான் அவன் இப்படி நடந்திருக்கிறான். இருக்கட்டும்; சீக்கிரத்தில் அவனை இங்கே வரவழையுங்கள்" என்று ஆக்ஞை செய்தனுப்பினான்.

அமைச்சர்கள் உடனே இரண்டு சேவகர்களை பத்ராஜலத்துக்கு அனுப்பிக் கோபன்னாவை வரவழைத்தார்கள். கோபன்னா வந்து நவாப்பைக் கண்டான். நவாபு கோபன்னாவைக்கண்டதும் கண்களிலிருந்து தணல் பொறி பறக்கக் கோபங்கொண்டு, "இந்நாள்வரையில் வசூல்செய்த பகுதிப்பணத்தை என்ன செய்தாய்? உன்னைப்பற்றிச் சிபார்சுசெய்த உன் மாமன்மார்களுக்கு நல்ல பேர் வாங்கிவைத்தாய்! இல்லையா? இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.



கேட்டதும் கோபன்னா வெகு சாந்தமாய் நவாப்பைப் பார்த்து, "நான் இராஜாங்க திரவியத்தை அநியாய வழியில் செலவழிக்கவில்லை. ஸ்ரீராமபிரானுடைய கோவில் கட்டுவதற்காகச் செலவழித்தேன். இதனால் இனி உமக்குப் பெரும் கீர்த்தி யுண்டாகும்" என்றான். தானேஷா "நீ நல்லது நவின்றாய்" என்று நகைத்து "வெகு விந்தை! வெகு விந்தை!! என்று பரிகசித்து, "என்னுடைய பொருளை என் உத்தரவில்லாமல் செலவழிக்க உனக்கு யார் அதிகாரங்கொடுத்தது? கோவில்கட்ட வேண்டுமானால் நீ கஷ்டப்பட்டுத் தேடிய பொருளைச் செலவழிக்கவேண்டும். அப்பொழுது உனக்கு நன்மை யுண்டாகும்; என்பொருளை என் உத்தரவின்றிச் செலவிட்ட துரோகியாகிய உனக்கு தெய்வந்தானெப்படி நன்மையைத் தரும்? அடமூடா! உனக்கேன் இப்படி புத்தி போயிற்று? இப்பொழுது பணத்துக்கு என்ன வழி சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

கோபன்னா, பணிவுடன், "பிரபுவே, என் சித்தம் சகல புவன கர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானிடம் ஈடுபட்டமையினால், "புல்லும் கல்லும் செடியும் நிறைந்து பாழாய்க் கிடந்த கோவிலைக் கண்டதும் அதனைப் புதுப்பிக்க வேண்டுமென்கிற சங்கற்பமுண்டாயது. இது நல்ல செய்கையாகையினால் உடனே முடிக்கவேண்டுமென்கிற எண்ணம் மேலிட்டது. ஆகையினால் இராஜாங்க திரவியமென்று கவனியாமல் என் ஐயன் கோவிலை வெகு விமரிசையாகக் கட்டிமுடித்தேன். அந்த தருமம் இவிடத்துக்கே உரியது"—என்றான்.

இதைக்கேட்டதும் தானேஷாவிற்குச் சிறிது கோபந் தணிந்தது. ஆயினும், இராஜாங்கப் பணத்

னைத் தன் உத்தரவின்றிச் செலவழித்த குற்றம் மன்னிக்கத் தக்கதல்ல என்று கருதி, கோபன்னாவைப் பார்த்து "நீ செய்த செய்கை மன்னிக்கற் குரியதல்ல. ஆதலின் உன்னைச் சிறைச்சாலைக்கு அனுப்புகிறேன். இன்று முதல் எட்டு நாட்களுக்குள் ஆறுலட்சம் வராகனையும் நீ எப்படியாவது செலுத்திவிடவேண்டும். அப்படிச் செலுத்தாவிட்டால் நீ சிறைச்சாலையிலேயே கிடந்து வருந்தவேண்டும்" என்று கூறி உடனே அவனைச் சேவகர்களிடம் ஒப்புவித்தான்.

சேவகர்கள் கோபன்னாவின் கையில் விலங்கு பூட்டிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் அடைத்துவிட்டனர். கோபன்னா தன் மனைவிமக்கள் எல்லோரையும் மறந்து ஸ்ரீராமனையே ஸ்மரித்துக்கொண்டு சிறைவாசஞ் செய்தார். எட்டு நாட்களும் கழிந்தன. பொருள் செலுத்தப்படவில்லை. அதனால் தானீஷா கடுஞ்சின மடைந்து, கோபன்னாவைப் பலபடியாக ஹிம்சிக்கும்படி சிறைச்சாலை அதிகாரிக்குக் கட்டளையிட்டான்.

அப்பால் கோபன்னாவுக்குச் சிறைச்சாலை அதிகாரி உப்பில்லாத சோறும் உப்பு அதிகம் கலந்த சோறும் அளித்துவந்தான்; அதை அவர் புசிக்க மறுத்தால் அடித்துத் தொந்தரவு செய்து புசிக்கும்படி செய்தான்; புசித்தபின் கடினமான வேலை செய்யவும் ஏவலாத் தலைப்பட்டான்; வேலையில் குறைவிருந்தால் பிரம்பு கொண்டடித்து வேலை வாங்கினன். கோபன்னா இந்தத் தண்டனை பொறுக்காமல் ஸ்ரீராமபிரானிடம் முறையிட்டுக் கண்ணீர் விட்டழுது கதறினன். அவன் ஸ்ரீராமபிரானிடம் முறையிடவே, அவனை அடிக்கும் அடிகளெல்லாம் சிப்பாய்களின் மேலேயே பட்டன. அது



கண்டு சிப்பாய்கள் வியப்புற்றுக் கோபன்னாவை, "இவன் பரமபக்த சிரோமணியாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்படியெல்லாம் நடக்காது" என்று எண்ணிக் கோபன்னாவினிடம் அன்புகொள்ளத் தலைப்பட்டனர்.

இவ்வாறு சில மாதம் கழிந்தது. பிறகும் பொருள் வாராமையினால் தானீஷா கோபன்னாவுக்கு இன்னும் கடுமையான தண்டனை விதிக்கும்படி சிறைச்சாலை அதிகாரிக்குக் கட்டளையிட்டான். சிறைச்சாலை அதிகாரி, தேள்களையும் நண்டுவாய்க்காலிகளையும் பாம்புகளையும் கோபன்னாவின்மேல் விட்டுத் துன்பப்படுத்தினன். அப்பொழுது கோபன்னா ஸ்ரீராமபிரான் மீது கீர்த்தனங்கள் பாடித் துதித்தான். துதித்த அளவில் அவனுக்கு அவைகளால் ஒருவிதத் துன்பமும் உண்டாகவில்லை. இது கண்டு சிறைச்சாலையிலிருந்தார் யாவரும் வியப்புற்றனர்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் ஸ்ரீராமபிரான் கோபன்னாவினிடம் இரக்கங்கொண்டு அவனுடைய கஷ்டத்தை நீக்கத் திருவுளங்கொண்டார். உடனே இலட்சுமணனையழைத்துக் "கோபன்னா நவாபுக்குச் செலுத்த வேண்டிய பொருளை யெடுத்துக் கொண்டு புறப்படு. ஐதராபாத்துக்குப் போய் நவாபினிடம் பொருளைச் செலுத்திக் கோபன்னாவைச் சிறையினின்று மீட்டு வருவோம்" என்றார். இலட்சுமணன் ஸ்ரீராமபிரானுடைய கட்டளைப்படி பொருளை யெடுத்துக் கொண்டு புறப்பட்டான். ஸ்ரீராமபிரானும் புறப்பட்டார்.

இவர்களிப்படிப் புறப்பட்ட இரவில், கோபன்னா "இப்படித்துன்பப்பட்டுக் கொண்டு எத்தனை நாளிருப்

பது. இதை விட இறப்பதே நல்லது. ஸ்ரீராமபிரான் கருணை செய்வதாகத் தெரியவில்லை" என்றெண்ணிப் பெருந்துயரத்துடன் தன் உயிரை மாய்த்துக்கொள்ள நிச்சயித்தான்.

கோபன்னு தானேஷாவிற்குச் செலுத்தவேண்டிய பொருளுடன் புறப்பட்ட ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் ஐதராபாதுக்குப்போய் நவாபின் அரண்மனைக் காவல்களைக்கடந்து அதற்குட் பிரவேசித்து மெதுவாய் அந்தப்புரம் சென்று கதவைத்தட்டி, "கோபன்னு உமக்குச் செலுத்தவேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்ளும். இதோ கொண்டுவந்திருக்கிறோம்" என்று கூறினர்.

தானேஷா மஞ்சத்தைவிட்டெழுந்து கதவைத் திறந்து பார்த்தான்; கண்களைக் கவரும் தேஜஸுடன் இரண்டு பேர் நிற்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு "நீங்கள் யார்? எவ்விடமிருந்து வருகிறீர்கள்? உங்களை யார் அனுப்பியது?—" என்று கேட்டான்.

அவர்கள், "நாங்களிருவரும் பத்ராஜலம் தாசில்தாருடைய சேவகர்கள். அவர் உமக்குச் செலுத்த வேண்டிய பொருளை எங்கள் வசம் கொடுத்தனுப்பினர். பெற்றுக்கொண்டு எங்களை அனுப்புங்கள்" என்றார்கள்.

தானேஷா சந்தோஷமும் வியப்பு மடைந்து, "உங்கள் பெயரென்ன? குலமென்ன?" என்று கேட்டான். அவர்களில் இலட்சுமணன் "நாங்கள் சூரிய குலத்திலுதித்தவர்கள். என்பெயர் லக்மோஜி! இவர் பெயர் ராமோஜி!' என்று கூறிப் பொருள்களைக் கொடுத்து நவாபினிடமிருந்து பொருள் செலுத்திய



தற்கு ஒரு கைச்சாத்து பெற்றுக்கொண்டு உடனே கோபன்னுவிருக்கும் சிறைச்சாலை சென்றனர். அங்கே சென்றதும் ஸ்ரீராமபிரான் லட்சுமணனை அனுப்பிவிட்டுத் தாம் தானேஷாவைப்போல் மாறு வேஷங்கொண்டு கோபன்னுவின் முன் பிரஸன்னமாய் நின்று, "ஸ்ரீராமதாஸரே" என்று அழைத்து "நீர் எமக்குக் கொடுக்கவேண்டிய பொருள் வந்து சேர்ந்தது" என்று கூறி அந்த க்ஷணமே மறைந்தார். மறையவே, ஸ்ரீ ராமதாஸர், இது ஸ்ரீ ராமபிரான் திருவிளையாடல் என்று நிச்சயித்து அவரைத் தியானித்துத் துதித்துப் பாடித் தொழுதெழுந்து மகிழ்ந்திருந்தார்.

மறுநாள் பொழுது புலர்வதற்குமுன் தானேஷா படுக்கையைவிட்டெழுந்து ஏவலாளரை அனுப்பி மந்திரிமார் இருவரையும் வரவழைத்துத் தனக்கு பொருள் வந்து சேர்ந்த அதிசயத்தைக் கூறி மகிழ்ந்து, "இப்பொழுதே சிறைச்சாலையிலிருந்து கோபன்னுவை அழைத்து வாரும்" என்றனுப்பிவிட்டுத் தானும் சபைக்குச் சென்றான்.

ஸ்ரீராமதாஸரின் மாமன்மார்களாகிய அமைச்சர்களிருவரும் உடனே பெருமகிழ்ச்சியுடன் சிறைச்சாலை சென்று ஸ்ரீராமதாஸரைச் சிறையினின்று விடுவித்துத் தானேஷாவினிடம் அழைத்துவந்தனர்.

ஸ்ரீராமதாஸரைக்கண்டதும் தானேஷா சிம்மாஸனத்தினின்றும் இறங்கி எதிர்கொண்டுவந்து வணங்கி வரவேற்று "உமது மகிமையினால் நான் ஸ்ரீராமச்சந்திரனைக் கண்டேன். உமது பெருமையை அறியாமல் உம்மைப் பலவாறாகத் தொந்தரவுசெய்த என்னை மன்

ளிக்க வேண்டுகிறேன்" என்று வேண்டிக்கொண்டு அவரை ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து தானும் தன் ஆசனத்திலமர்ந்து ஸந்தோஷமாகப் பேசலானான்.

அப்பொழுது ஸ்ரீராமதாஸர் தானேஷாவைப் பார்த்து, "பிரபுவே, உமக்கு எளிதில் ஸ்ரீராமபிரானுடைய தரிசனம் கிடைத்தது. உமது புண்யம் பெரிது. இனி நீர் குறைவற்றவராக விளங்குவீர்" என்றார்.

தானேஷா, "எல்லாம் தம்முடைய ஸத்ஸங்கத்தினாலேயல்லது வேறல்ல. ஸத்ஸங்கம் வீணாகாதென்று பெரியோர் கூறுவர். அதனை அநுபவத்திற்கண்டு மகிழ்ந்தேன்" என்று கூறி மந்திரிகளைப்பார்த்து, "நமக்குச் சொந்தமான பத்ராசலம் தாலுகாவை ஸ்ரீராமபிரானுக்கு உரிமையாக்குங்கள்! ஸ்ரீராமதாஸரை அதற்குப் பிரபுவாக நியமித்துவிடுங்கள். அவர் அந்த ஜகத்பிரபுவினுடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டவராயிருந்துவரட்டும்" என்று தெரிவித்துப் பகவான் கொடுத்த ஆறுலட்சம் வராகனையும் பத்ராஜல க்ஷேத்திர கைங்கரியத்திற்கே மூலதனமாக உதவி மகிழ்ந்தான். பிறகு சபை கலைந்தது. ஸ்ரீராமதாஸர் நவாபினிடமும் தமது மாமன்மார்களிடமும் பணிவாய் விடைகொண்டு பத்ராஜலம் போய் ஸ்ரீராம கைங்கர்யம் செய்துகொண்டு பரம சுகமாக வாழ்ந்து வந்தார்; முடிவில் முத்தியின்ப மடைந்தார்.

## மதிமானே பெருமையடைவான்

அக்பர் பாதுஷா என்னும் மகமதிய சக்ரவர்த்தி டில்லியில் அரசுபுரிந்துவந்த காலத்தில் அதிமேதாநிதி என்னும் பிராமணனொருவன் அமைச்சனாயிருந்தான். அதிமேதாநிதி மகா புத்திசாலி; யுக்தியிலும் சிறந்தவன். ஆகலின் இவன் மந்திரியாய் வந்தபிறகு இவனுக்கு முன்பிருந்த மந்திரிகளுக்கெல்லாம் இராஜ சமுகத்தில் அதிக வேலையில்லாமற் போயிற்று. அல்லாமலும் சக்ரவர்த்தியும் அவர்களை மதிப்பதில்லை. குடிகளுக்கும் அவர்களிடத்தில் அதிகமாக மதிப்பில்லாமற் போயிற்று.

இப்படியாகவே அவர்களெல்லாரும் இராணியினிடம் போய், "தாயே, அதிமேதாநிதி மந்திரியாய் வந்தபிறகு எங்களுக்கெல்லாம் அரசாங்கத்தில் மேன்மையில்லாமற் போய்விட்டது. நியாயமாய்த் தங்கள் தம்பியார் அடைய வேண்டிய மந்திரிஸ்தானம் அது. அதனை எங்கேயோ கிடந்த பார்ப்பானொருவன் அடைந்துவிட்டபடியால் அவன் பொறுத்தற்கரிய இறுமாப்புக் கொண்டிருக்கிறான். இதனால் இராஜ்யத்திற்கே மோசம்வரும். பார்ப்பானுக்கு இவ்வளவு இடங்கொடுப்பது கூடாது. நீங்கள், சக்ரவர்த்திக்குச் சொல்லி எந்த விதத்திலாவது இந்த மந்திரி பதவியை உங்கள் தம்பிக்குச் செய்விக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கெல்லாம் க்ஷேமமுண்டாகும்" என்றார்கள்.

இராணி, "நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் எந்த விதத்திலேனும் அந்தப் பார்ப்பானை மந்திரி பதவியிலிருந்து நீக்க வழிதேடுகிறேன். நீங்கள் போங்கள்"

என்று கூறி அனுப்பி அவர்கள் சென்றபின் அந்தப்புரத்தில் ஓர் அறையில் தலைவிரி கோலமாய்ப் படுத்துக் கொண்டாள்.

அக்பர் பாதுஷா அந்தப்புரம் போனபோது தம்முடைய மனைவி படுத்துக்கிடக்கும் அலங்கோலத்தைக் கண்டு கவலைகொண்டு, அருகிற்சென்று "உடம்புக்கு என்ன நோய் வந்தது? சொல். வைத்தியர்களை வரவழைக்கிறேன்" என்று கேட்டான். அவள், "நாதா, உடம்பு முழுவதும் ஒரே எரிச்சலாய் எரிகிறது. வைத்தியர் சுந்தர்சிங் வந்து பார்த்தார். அவர் 'எருது வெண்ணெயிருக்கிறது. அதனை எங்கிருந்தேனும் வரவழைத்து தேக முழுதும் தடவினால் தீரும்' என்று கூறிச் சென்றார். அதை வரவழையுங்கள் எப்படியாவது" என்றாள்.

சக்ரவர்த்தி, பசுவின் எண்ணெய் என்பதன்றே தவிர எருதின் வெண்ணெய் உண்டா என்பதைப்பற்றிச் சிறிதும் ஆலோசியாமல் அவ்விடம் விட்டு வேகமாய்ச் சபைக்கு வந்து சேவகனை யனுப்பி மந்திரி அதிமேதாநிதியை வரவழைத்து அவனிடம் மனைவியின் தேகஸ்திதியைக் கூறி எருதின் வெண்ணெய் தருவிக்கும்படி கட்டளையிட்டான்.

அதிமேதாநிதி அதைக் கேட்டதும் தனக்குள் நகைத்து, "சக்ரவர்த்தி இப்படிப்பட்ட கட்டளையிடுவதினால் இதில் ஏதோ சூதிருக்கிறது. நிச்சயம்" என்று கண்டு, சக்ரவர்த்தியைப் பார்த்து, "வேந்தே, அதை வரவழைக்க ஒரு வாரம் செல்லும். அது காஷ்மீர தேசத்திலிருக்கிறது. அதற்குச் செலவிற்காக ரூ. 2000



வேண்டும்" என்றான். அக்பர்பாதுஷா உடனே அத்தொகையை மந்திரிக்குக் கொடுத்து அவனை அனுப்பினார். மந்திரி அத்தொகையை ஏழை எளியவர்களுக்கு அன்னமிடுவதிற் செலவழித்துவிட்டு ஏழாம் நாள் பகலில் தன் மகளை வரவழைத்து, "நீ போய் அரண்மனைப் பின்புறத்திலுள்ள குளத்தில் துணிகளைத் தோய்த்துக் கசக்கினால் சேவகன் வந்து பிடித்துக்கொண்டு சக்ரவர்த்தியினிடம் கொண்டு போவான். சக்ரவர்த்தி, 'நீயேன் குளத்தில் துணி கசக்கிறாய்? அரண்மனைக் குளத்தில் ஒருவரும் துணி கசக்கக்கூடாதென்பது நமதுத்தரவென்பதை நீ யறியாயா?' என்று கேட்பார். கேட்டால் நீ, 'என் தந்தை பிள்ளை பெற்றிருக்கிறார். அந்தப்பிள்ளையின் மேலே போடக் கசக்கிய துணி வேண்டுமாம். மருத்துவச்சி சொன்னாள். அதனால் வந்து கசக்கினேன்' என்று சொல்லு. பிறகு பாதுஷா, 'புருஷர்கள் பிரஸவிப்பதுண்டா?' என்று கேட்பார். கேட்டால் நீ, 'எருது வெண்ணெய் தருமா?' என்று கேள்" எனக் கூறியனுப்பினான்.

மந்திரி மகள் அவ்வாறே அன்றிரவில் அர்த்தராத்திரி வேளையில் அந்தக் குளத்திற்குப்போய்த் துணி கசக்கினாள். சேவகன் வந்து அவளைப் பிடித்து அரசனிடம் கொண்டுபோய்விட்டான். "பாதுஷா உத்தரவை மீறி நீ ஏன் நடந்தாய்?" என்று கேட்டார். அவள் தன் தந்தை சொல்லிக்கொடுத்தமாதிரி சொன்னாள். சக்ரவர்த்தி கேட்டதும் நகைத்து, "புருஷன் பிரஸவிப்பதுண்டா? என்ன ஆச்சரியம்!" என்றான். மந்திரி மகள், "எருது சுரப்பதுண்டா? அது பால் சுரந்து

அந்தப் பாலிலிருந்து வெண்ணெய் வருவதுண்டா?" என்று கேட்டாள்.

இதைக்கேட்டதும் சக்கர்வர்த்தி தாம் மந்திரிக்கு இட்ட கட்டளையை நினைத்துப்பார்த்து, "எருது பால் கறக்குமா? அது பால் கறந்தாலல்லவா வெண்ணெய் கிடைக்கும்? பெண்பிள்ளை பேச்சைக்கேட்டுக்கொண்டு மூடத்தனமாய் அதைக் கொண்டுவரச்சொன்னேமே" என்று எண்ணி நாணமுற்று, "மாதே, என் தவறு உணர்ந்தேன். என் தவறை உணர்த்தமந்திரி இந்த யுக்தி செய்ததையும் மெச்சுகின்றேன். உன்னுடைய தைரியத்தையும் நான் பெரிதாய் எண்ணுகிறேன்" என்று கூறி அவளுக்குத்தக்க வெகுமானந்தந்தனுப்பி உடனே மனைவியை அழைத்து "ஒருகாலத்தும் கிடைக்காததை வரவழைக்கவேண்டுமென்று ஏன் சொன்னாய்? அப்படிக் கேட்டதற்கு வஞ்சகமான காரணம் ஏதேனும் இருக்கவேண்டுமென்று கருதுகிறேன். உண்மையைச் சொல்" என்று மிரட்டிக் கேட்டான். அவள் மந்திரிகள் வந்து தன்னிடம் முறையிட்டதன்மேல் தான் அப்படிச் செய்ய நேரிட்டதென்று உண்மையைச் சொல்லிவிட்டாள். பாதுஷா "இனி அப்படி ஒருபோதும் நடவாதே. இது முதல்தடவையானதால் மன்னித்தேன். நமது அதிமேதாவி மகா புத்திசாலி. அவனால் நம்முடைய இராஜ்யம் சகல நன்மைகளையும் அடையும். நாமும் பெருமையடைவோம். மதியில்லாத மந்திரி பலரிருப்பதிலும் மதிமானாகிய ஒருவனிருப்பது மேலல்லவா?" என்று கூறியனுப்பிவிட்டு மறுநாள் பொறாமைக்காரர்களாகிய பழைய மந்திரிகளை வரவழைத்து, கண்டித்தனுப்பினான்.

17


# AMRUTANJAN.




அமிர்தாஞ்சனம்.

சகல நோய்களுக்கு சித்தௌஷதம்.

விலை அணா பத்து விலை 0—10—0

இருபத்தைந்து வருஷமாக லக்ஷக்கணக்காக விற்றுவருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார்செய்யப்பட்டு அழகாய்
பாக் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுகளுக்கும்

ஒரு கைகண்ட அவுஷதம் அமிர்தாஞ்சனமே. தலைவலி, முதுகுவலி சுளுக்குப்பிடிப்பு முதலிய எல்லா நோவுகளையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## உடனே முந்துங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மோஹினி தைலம். | பாட்டில் 1-க்கு | 0 | 12 | 0 |
| படை மருந்து. | டப்பி 1-க்கு | 0 | 6 | 0 |
| பல் பொடி. | டப்பி 1-க்கு | 0 | 2 | 0 |

## அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.


5

*To be opened shortly!!*

# P. R. NATHAM & CO.,

**285, China Bazaar Road,**

(Next to Pachaiyappas) Madras.

**The Cheapest and Reliable House for stationery articles such as:**

Office & School stationery of all kinds, Leather bound books of Conqueror and other papers. Marble bound and Calico bound books of different sizes and in different quality of papers. Exercise Books, Students books and etc. Envelopes of all kinds, Art papers, Bank papers, cream laid writing papers, Waterman, Swan, Blackbird Pens, and of all kinds.

எங்களிடத்தில் ஆபீஸ்களுக்கும், ஸ்கூல்களுக்கும் வேண்டிய எல்லாவித சாமான்களும், கவர் தினுசுகள், காகிதம் தினுசுகள், பேனா, பென்சல் வகையறாக்கள், வாட்டர் மென்ஸ், சுவான், பிளாக்பேர்ட் பௌண்டன் பேனாக்கள், தோல் பயிண்டு, கலிக்கோ பயிண்டு, மார்பில் பயிண்டுகளால் செய்த பேரேடு குயர்பு முதலிய வகைகளும் இன்னும் வேண்டியவைகளும் விலை சரசமாய் கிடைக்கும்.

டாக்டர் **B. S.** மல்லையா **B.A., M.B., C.M.**

அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

# R. S. சுகந்த மூக்குத்தூள்

பல மெடல்களும் சர்டிபிகேட்டு களும் பரிசுபெற்றது.



பீனிசம், ஜலதோஷம், தலைவலி முதலிய வியாதிகளை போக்கக்கூடியது.

பல அபூர்வமான மூலிகைகளும், வாசனைத் திரவியங்களும் சேர்ந்தது.

விலை பாடல் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூ. 2 4 0

டை ஒரு சேர் டின் 1-க்கு ரூ. 1 12 0.

எங்கும் புகழ்பெற்ற

## பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது.

நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு 4 0 0

டை சாதா ரகம் வீசை 1-க்கு 3 8 0

வி. பி. ரயில்சார்ஜ் வகையறா பிரத்யேகம். அரைவீசைக்கு குறைந்த ஆர்டருக்கு இல்லை ரேட்டு போடப்படும். மற்ற விவரங்களுக்கும் இன்னும் கிடைக்கக்கூடிய தினுசுகளுக்கும் எழுதவும்.

விலாசம்:—பி. வி. ராஜன் (அன்), கம்பெனி,

நெ. 44. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதறாஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்".

வெளியாய்விட்டது வெளியாய்விட்டது

மாதர்களுக்கோர் சிறந்த பொக்கிஷம்

# மாதர் நீதி

விலை ரூ. 1-0-0.

## இளமைப் பருவத்தில்

1. பள்ளிக்கூட முறைமை, 2. வீண்காலப்போக்கு, 3. துர்அப்பியாசங்கள், 4. உண்மை, 5. சிடுப்படுதல், 6. திருட்டுத்தனம்; 7. வேடிக்கைபார்த்தல், 8. பரிகசித்தல் ஆக 8 வியாசங்களும், 6. கதைகளும் அடங்கியிருக்கின்றன.

## கணவனோடு கூடிவாழும் பருவத்தில்.

1. விவாகம், 2. நித்தியக்கடமைகள், 3. இல்வாழ்க்கை, 4. ஒற்றுமை, 5. சுத்தம், 6. சாமர்த்தியம், 7. வீண்செலவு, 8. பிள்ளைகளைப்பயிற்றல், 9. விருந்தினரை உபசரித்தல், 10. உபகாரம், 11. பொறுமை மேன்மைப்படுத்துமென்பது, 12. புறங்கூறல் இகழ்ச்சியென்பது, 13. தன்னைப் புகழ்தல் புத்தியீனமென்பது, 14. பரபுருஷரை இச்சித்தல் மகா கொடியதென்பது, 15. விபசாரிகளின் முடிவு, 16. செல்வம் கேட்டைத்தருமென்பது. 17. அடக்கம், 18. பொறாமை சரித்திரத்தைப் புண்படுத்துமென்பது. 19 சுற்றத்தாருக்கிணங்க நடத்தல், 20. பேராசை பெருநஷ்டம் என்பது, 21 துன்மார்க்க புருஷரை சன்மார்க்கத்தில் திருப்புதல், 22. மனைவியின் பக்தியினால் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது, (அதாவது, கணவருக்குச் சமயத்தில் தக்கபோதனை சொல்லிக் காப்பாற்றுதல்) 23. பெண்பிள்ளைக் கல்வியின் உபயோகம், ஆக 24. வியாசங்களும், 12-கதைகளும் அடங்கியிருக்கின்றன.

## முதுமைப் பருவத்தில்:

1. முதுமையில் ஸ்திரீகளுக்குண்டாகும் துர்க்குணங்கள் 2. ஸ்திரீகள் தம் மருமக்கள்மாருக்குச் செய்யும் கொடுமைகளும் அவற்றின் விளைவும்; 3. ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாரை நடத்தவேண்டிய நல்வழிகள், 4. ஸ்திரீகள் முதுமையில் கவனித்து நடக்கவேண்டிய முறைமைகள், 5. ஸ்திரீகள் முதுமையில் தம் புத்திரருக் கடங்கியிருக்க வேண்டுமென்பது ஆக 5 வியாசங்கள் அடங்கியிருக்கின்றன. பெதர்வெயிட் காகிதத்தில் அச்சிட்டது.

ஸ்ரீ திரிபுரசுந்தரி விலாச நிலயம்,

4/34, கவிளியப்ப நாய்க்கன் வீதி, பார்க் டவுன், சென்னை.

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள். Dec-93

செப்பனிட்டு முடித்த நாள் Feb. 94

சரிபார்க்கும் வ. பா. எ. கையொப்பம்.

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்.